**TNTT070026742026**

<u>நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2, கோவில்பட்டி</u>

முன்னிலை – திருமதி. M. மணி மேகலா, எம்.ஏ., எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, கோவில்பட்டி

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ம் நாள் செவ்வாய்கிழமை

Crl.M.P.No. 759/2026

in

Cr.No. 536/2026

ராமர், வயது 19/2026,
த/பெ. காளிராஜ்,
9 வது தெரு,
நடராஜபுரம்,
கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.

... மனுதாரர்/எதிரி

*/எதிர்/*

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்
கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம்
நிலைய குற்ற எண். 536/26 ...எதிர்மனுதாரர்/புகார்தாரர்

1.மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வளன் வினோ சிங் அவர்கள் ஆஜராகியும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு

<u>உத்தரவு</u>

<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்</u>

2. மனுதாரர்/எதிரி மீது கோவில்பட்டிமேற்கு காவல்நிலைய குற்ற எண் 536/26 சட்டப்பிரிவுகள் 296(b), 132, 224, 351(3) BNS, 20(b)(ii)(A), 8(c) NDPS Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, எதிரி 07.06.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மனுதாரர் குற்றமற்றவர். மனுதாரர் சட்டத்தை மதிப்பவர் என்றும், தலைமறைவாக மாட்டார் என்றும், அவரை பிணையில் விடுவிக்க பிணையதாரர்களை வழங்க தயாராக இருப்பதாகவும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

3. அரசு தரப்பு வழக்கு என்னவென்றால், எதிரி அரசால் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களை வைத்துக்கொண்டு அதிக லாபநோக்கத்தோடு விற்க முயற்சி செய்ததாகவும், போலீஸ் பார்ட்டிகளை அரசு பணி செய்யவிடாமல் தடுத்தும், அசிங்கமாக பேசி, கொலைமிரட்டல் விடுத்ததாக எதிரி மீது கோவில்பட்டிமேற்கு காவல்நிலைய

குற்ற எண் 536/26 சட்டப்பிரிவுகள் 296(b), 132, 224, 351(3) BNS, 20(b)(ii)(A), 8(c) NDPS Act–ன் கீழ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆட்சேபணையின் சுருக்கம்:**

4. அரசு தரப்பில் 17.06.2026ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையில், கோவில்பட்டிமேற்கு காவல்நிலைய குற்ற எண் 536/26 சட்டப்பிரிவுகள் 296(b), 132, 224, 351(3) BNS, 20(b)(ii)(A), 8(c) NDPS Act ன் வழக்கானது தற்போது ஆரம்பகட்ட புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், இவ்வழக்கின் எதிரியானவர் காவல் பணியில் உள்ள காவல் அதிகாரி மற்றும் காவல் ஆளிநர்களை பணி செய்யவிடாமல் தடுத்தும், கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியும் உள்ளார் என்றும், இவ்வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் மீண்டும் இதுபோன்ற கஞ்சா வகை பொருட்களை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விற்பனை செய்து சமூக சீர்கேட்டை ஏற்படுத்தக் கூடும் என்றும், எதிரிக்கு கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் 5க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது என்றும், இவர் கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய சரித்திர பதிவேடு (HS.219/2025) திறக்கப்பட்டு மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறார் என்றும், வழக்கின் நீதிமன்ற விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் வெளி மாநிலங்களுக்கோ அல்லது வெளி மாவட்டத்திற்கோ சென்று தலைமறைவாகி வழக்கின் விசாரணையில் காலதாமதம் ஏற்படுத்தக்கூடும் என்றும், எனவே எதிரியை பிணையில் விடுவிக்க கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

**இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா?**

5. ஆவணங்கள் பரிசீலிணை செய்யப்பட்டன.

6.மனுதாரர்/எதிரி தரப்பில் சட்டப்பிரிவு 480 BNSS கீழ் மனுதாரர்/எதிரிக்கு பிணை கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிரி தரப்பில் கற்றறிருந்த வழக்கறிஞர் வாதிடும்போது, எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், நீதிமன்றம் உத்தரவிடும் நிபந்தனையை கடைபிடிக்க எதிரி தயாராக உள்ளார் என்றும் வாதுரை செய்தார்.

8. ஆவணங்களை பரிசீலணை செய்து பார்க்கும் போது, எதிரி 07.06.2026ம் தேதி முதல் ஏறக்குறைய 17 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்து வருவதை கருத்திற்கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டும் இந்நீதிமன்றம் பிணை மனுவை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என்று தீர்மானிக்கிறது.

9. இறுதியாக இப்பிணை மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது:

**நிபந்தனைகள்:**

1. மனுதாரர் இரண்டு பிணையதாரர்களை ஆஜர்படுத்தி தலா ரூ.10,000/–த்திற்கு பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர் இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடக்கூடாது.
3. மனுதாரர் சாட்சியங்களை கலைக்கவோ, சாட்சிகளை மிரட்டவோ கூடாது.

4. விசாரணை தேவைப்பட்டால் மனுதாரர்கள் காவல்துறைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

5. மனுதாரர் தினசரி காலை 10.00 மணிக்கு எதிரி/மனுதாரர் காவல்நிலையத்தில் 15 நாட்கள் கையெழுத்திட வேண்டும் என்றும், உத்தரவிடும்போது இந்த நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்படுகிறது.

//இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் வருடம் ஜூன் மாதம் 23ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.//

(ஒப்பம்)...M. மணி மேகலா/22.06.2026

நீதித்துறை நடுவர் எண்.II

கோவில்பட்டி.